மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

நி.ம.எண். 10/2019

நிமசா1

தேதி :- 29.11.2021

பெயர் :- சக்திவேல் த/பெ .:- முத்து

வயது :- தொழில்:- ஊராட்சி செயலர்

கிராமம் :- அகரம் தாலுகா:- ஏரல்

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின் படி 2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் தேதி 29 ஆம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

நான் இந்த மனுவில் அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்கிறேன் அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்கள் கொண்டுவந்துள்ளேன். 2005-2006 ம் வருடத்திய வீட்டுவரி கேட்புபதிவேடு அதிலுள்ள 9ம் பக்கம் கதவு எண்.168 எண்ணுக்குரிய பதிவேடு நகல் **நிமசாஆ1** இந்த ஆவணம் நாராயண நாடார் பெயரில் உள்ளது என்றால் சரிதான், 2008-2009 ம் வருடத்திய வீட்டுவரி கேட்புபதிவேடு அதிலுள்ள 9ம் பக்கம் கதவு எண்.168 எண்ணுக்குரிய பதிவேடு நகல் **நிமசாஆ2** இந்த ஆவணம் N.மங்களம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 2013-20014 ம் வருடத்திய வீட்டுவரி கேட்புபதிவேடு அதிலுள்ள 9ம் பக்கம் கதவு எண்.168 எண்ணுக்குரிய பதிவேடு நகல் **நிமசாஆ3** இந்த ஆவணம் N.மங்களம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் மங்களம்மாள் என்ற பெயர் சிவப்பு பேனாவால் வட்டமிட்டு சிவசுப்பிரமணியன் பெயரில் மாற்றியுள்ளார்கள் என்றால் சரிதான். பெயர் மாற்ற உத்தரவு கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வரவில்லை. Writ மனுவின் (writ petition No. 6582/2015 தேதி 13.3.2015) இறுதி ஆணை சார்ப செயய்ப்பட்டதுஅதன் உண்மை நகல் **நிமசாஆ4**. இதே நீதிமன்றத்தில் மு.வ.எண்.20/2010 தீர்ப்பு தேதி 3.3.2010

தீர்ப்பாணை மற்றும் தீர்ப்பு நகல் **நிமசாஆ5** மற்றும் **நிமசாஆ6** ஆகும். அந்த தீர்ப்பு நகலில் மங்களம்மாள் மற்றும் நவீததுரை மற்றும் நவீதசங்கர் பெயர்கள் இல்லை என்றால் சரிதான். ஊராட்சிமன்றத்தில் சூ.னு.சிவசுப்பிரமணியன் என்பவர் 5.9.2014ல் பெயர் மாற்றம் கதவு எண்.1/168, 1/169, 1/170 ஆகியவற்றிற்கு பெயர் மாற்றம் செய்யகூடாது என்று அனுப்பிய பதிவு தபால் நகல் **நிமசாஆ7**. உயர் நீதிமன்றத்திற்கு பஞ்சாயத்து தலைவர் அவர்கள் Writ மனுவில் உத்தரவு நிறைவேற்றுதல் தொடர்பாக High Court க்கு அனுப்பிய இறுதி ஆணை நகல் **நிமசாஆ8**. இதில் கதவு எண்.1/168 என் பச்சை மையினால் எழுதப்பட்டது என்றால் சரிதான். கதவு எண்.1/168, 1/169, 1/170 வீட்டு தீர்வை செலுத்த கோரி சிவசுப்பிரமணியன் மற்றும் வேலசுப்பிரமணியன் ஆகிய மனுதாரர்கள் ஊராட்சியில் கொடுத்த 'மனு உண்மை நகல் **நிமசாஆ9** ஆகும். கடந்த 22.6.2015 தேதிய கடித்தத்திற்கு மனுதாரர்கள் உறுதி மொழி என்ற பெயரில் ஊராட்சிமன்ற தலைவருக்கு கொடுக்கப்பட்ட கடிதம் **நிமசாஆ10.** எங்கள் அலுவலக பதிவேட்டில் உள்ள பதிவு துறை பதிவாளர் அலுவலத்திற்கு பத்திரத்தை ரத்து கோரி அனுப்பட்ட மனுவின் அஞ்சல் நகல் அலுவலக கோப்பில் உள்ள உண்மை நகல் **நிமசாஆ11**. மனுதாரர் மூலமாக குறியீடு செய்யாமல் எந்தவித மூகாந்திரமும் இல்லாத ஊராட்சி மூலம் மேற்சொன்ன நிமாசாஆ11 ஆவணம் குறியீடு செய்யய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. எனது அலுவலக கோப்பில் மு.வ.20/2004 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட சமரச மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் பேரில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி கதவு எண்.1/168 மங்களம்மாள் பெயரிலிருந்து சிவசுப்பிரமணியன் பெயருக்க வீட்டு வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டது மேற்சொன்ன ஆவணம் குறித்த இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது ஆனால் இந்த மனுவின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது அந்த மனுவின் நகல் எதிர்மனுதாரர் சம்மதத்துடன் குறியீடு செய்யப்பட்டது அது **நிமாசாஆ12** ஆகும். மு.வ.எண்.20/2004 வழக்கில் மங்களம்மாள் மற்றும் நவீததுரை மற்றும் நவீதசங்கர் பெயர்கள் இல்லை என்றால்

சரிதான். கதவு எண்.1/128க்குரிய வீட்டுவரி கேட்புபதிவேடு எடுத்து வரவில்லை என்றால் கதவு எண்.1/128 என்பது கதவு எண்.1/168 என்று மாற்றம் செய்யப்பட்டதால் பழைய பதிவேடு என்பதால் எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டது.